# 53ஆண்டுகள் ஓயாது ஒலிக்கும் 'உனக்குத் தெரியுமா நான் உன்னைநினைப்பது ..'

ஈழத்தின் வடக்கு,கிழக்கு தமிழர் பகுதிகளில் கலைகள் எழுச்சி பெற்ற காலம்.நாடகம்,நடனம் என்பவற்றிலும் பார்க்க இசைக்கலை வேகமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் பாரம்பரிய நாட்டார் இசை, கர்நாடக இசை என்பவை ஒரு புறத்தில் வளர்ச்சி கண்டன.இன்னொரு புறத்தில் ஜனரஞ்சக இசை வளர்ச்சி பெற்றது.தென்னிந்திய திரையிசைப்பாடல்களை அப்படியே பிரதிசெய்து பாடுவது, இசைமீட்டுவது என்கின்ற கலைவளர்ந்து சென்றது.இந்த இசைப் பயணத்தில் இசையமைப்பாளர்கள் இரட்டையர்களாகத் திகழ்ந்து சாதனை படைத்தார்கள்.

வடக்கில் கண்ணன்,தெற்கில் வாழ்ந்து வந்த ஸவாஹிர் மாஸ்ரருடன் இணைந்து கண்ணன் - ஸவாஹிர் என்றும்,பின்னர் நேசனுடன் இணைந்து கண்ணன் நேசன் என இசையுலகில் வலம் வந்தார்கள்.அதுபோல கிழக்கில் திருமலையில் பரமேஷ்-கோணேஷ் இரட்டையர்கள் என சாதனை படைத்தார்கள்.இது தெற்கில் தொடர்ந்தது மோகன்-ரங்கன்,அடுத்து பயாஸ்-ரட்ணம் இவர்கள் இரட்டையர் களாகவே திகழ்ந்து இசைப்பணியாற்றினர்.

பயாஸ்-ரட்ணம் இரட்டையர்களின் இசைப்பயணம் இப்பொழுதும் தொடர்கிறது. திருமலையில் இசைத்துறை எழுச்சி என்பது இசையமைப்பாளர் திருமலை பத்மநாதன் அவர்களிலிருந்தே தொடங்குகிறது. (ஏ.ரகுநாதன் தயாரித்து நடித்த ஈழத்தின் நான்காவது திரைப்படமான நிர்மலாவுக்கு இசை அமைத்தவர்) திருமலை இசைக்கழகம் இதற்கு வழி வகுத்தது.




எம்.பி.பரமேஸ் அவர்களின் 75வயது பிறந்தநாளை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது

S.K Rajen (IBC london

இவருடன் இசைப்பணியாற்றியாவர்களே பின்னாளில் தனித்தனியாக இசைக்குழுக்களை ஆரம்பித்துக் கொண்டனர். அத்துறையில் அவர்களும் புகழ் பெற்றனர். திருமலையில் வாழ்ந்து வந்த இசைக்கலைஞர்கள் பலருக்கு ஆதர் சாம்சன் என்கின்ற (ஆங்கிலோ சிறிலங்கன்) இசை விற்பன்னர் பெரும் ஆதார சுருதியாக விளங்கிவந்தார். இசை நுணுக்கங்களை இவரிடமிருந்து பயின்று தமது இசைத்துறையில் எமது கலைஞர்கள் சாதனை படைத்தனர்.கிழக்கு மாகாணம் திருமலையில் தோற்றம் பெற்று முழு இலங்கையிலும் இசையால் புகழ் பெற்றவர்களாக விளங்கியவர்கள் பரமேஷ்-கோணேஷ் இசைக்கலைஞர்கள்.இதில் மூத்தவரான எம்.பி.பரமேஷ் பாடலாசிரியராக, பாடகராக, இசையமைப்பாளராக என பல சிறப்புக்களைக் கொண்டவர்.

1960களின் பிற்பகுதியில் இசைநிகழ்ச்சி மேடைகளில் அனேகமாக எல்லோருமே தென்னிந்தியத் திரையிசைப்படல்களையே பாடிவந்தனர். அந்நாட்களில் எம்.பி.பரமேஷ் மேடைகளில் பாடியது, பச்சைவிளக்கு திரைப்படத்துக்காக ரி.எம்.சௌந்தரராஜன் பாடிய ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது.. என்ற பாடல். இந்தப்பாடலின் முதல்வரிகள் அமைந்தது போல் எம்.பி.பரமேஷின் கலைவாழ்வும் ஒளிமயமானது .எம்.பி.பரமேஷ்க்கு இசை ஞானமும், பாடல் புனையும் ஆற்றலும் அவரது பெற்றோர் வழி வந்தது.இவரது தந்தையார் வித்தியாதிகாரி மா.பீதாம்பரம் அவர்கள், பாலர்களுக்கான பாலபோதினி என்னும் அரிவரிப் பாடப்புத்தகத்தில் நாம் எல்லோரும் படித்த அந்த மரம் ஆலமரம் அழகான நல்ல மரம் என்ற பாடலை எழுதியவர்.பிள்ளைப்பாட்டுக் கவிஞர் என்றமாண்பேற்றம் இந்தியக்கலைஞர்கள் மத்தியில் கிடைத்தது. அதற்காக விருதும் பெற்றுக்கொண்டவர்.இவர் பிள்ளைப்பாட்டுக் கவிஞராகப் புகழப்பட்டவர். இலங்கை வானொலியில் நடைபெற்று வந்த சைவநற்சிந்தனை நிகழ்ச்சியில் சொற்பொழிவாளராகவும் விளங்கிப் புகழ் பெற்றவர். பரமேஷின் தாயார் ஹார்மோனியம் மீட்டுவதில் ஈடுபாடு கொண்டவர்.இவையே எம்.பி.பரமேஷ் என்ற இசைக்கலைஞர்,பாடலாசிரியர் என ஈழத்தில் உருவாக வழி வகுத்தன.தென்னிந்திய திரைப்படப்பாடல்களை மாத்திரமே மேடைகளில் பாடிவந்தவர்கள் மத்தியில் நம்நாட்டுப்பாடல்களையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்ட எம்.பி.பரமேஷ்

உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது.. என்ற பாடலை 1968ல் எழுதிப் பாடியிருந்தார்.இப்பாடல் அவரது அன்புக்காதலி, பின்னர் அவரது இசைத்தோழியாகி பரமேஷின் வாழ்க்கைத்துணைவியாகத் திகழ்ந்து இசையரங்கங்களை எல்லாம் பரமேஷுடன் இணைந்து அலங்கரித்த சங்கீதபூஷணம் மாலினி அவர்களுக்காகப் பாடப்பட்டது.இந்தியாவில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இசைக்கலை பயின்று வந்த மாலினி அவர்களின் செவிகளை அன்றைய காலகட்டத்தில் இந்தப்பாடல் சென்றடைந்தது என்றால் அதற்கு ஒரேவழியாக விளங்கியது இலங்கை வானொலி மாத்திரமே. எம்.பி.பரமேஷ் தனது காதலிக்காக எழுதிப்பாடிய உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது.. என்ற பாடலுடன் மேலும் மூன்று பாடல்களை எழுதி இசையமைத்து அதனை 1970ல் இசைத்தட்டாக வெளியிட்டனர்.இலங்கையில் முதன்முதலில் எமது மெல்லிசைப்பாடல்களுடன் வெளிவந்த இசைத்தட்டின் வெளியீட்டாளர்கள் பரமேஷ் கோணேஷ் என்பது வரலாற்றுப்பதிவு. தென்னிந்தியத் திரைப்படப்பாடல்கள் மட்டுமே ஆக்கிரமித்திருந்த இசைத்தட்டுக்களைப் பார்த்துப்பழகிய நம்மவர்களிடையே பரமேஷ் கோணேஷ் இசைக்கலைஞர்களின் ஈழத்து மெல்லிசைப்பாடல்கள் அடங்கிய இசைத்தட்டின் வரவு பெரும் ஆச்சரியத்துக்கும், துறைசார் வல்லுனர்களின் பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் வரவேற்புக்கும் உள்ளானது.இலங்கை வானொலிக்கு இவர்களது பாடல்கள் பிளாஸ்ரிக்கில் இசைத் தட்டாக வழங்கப்படுவதற்கு முன்னர் அலுமினியத்தட்டில் பிரதி செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

அவற்றை அன்று வர்த்தக சேவையில் ஒலிபரப்பி பரமேஷ் கோணேஷ் இசைக்கலைஞர்களுக்கு புகழ் சேர்த்ததில் பெரும்பங்கு வகித்தவர் உலகத்தமிழ் ஒலிபரப்பாளர் பீ.எச்.அப்துல் ஹமீத் அவர்கள்.இலங்கை வானொலியில் அந்த நாட்களில் நிகழ்ச்சிகளின் நிறைவில் தனிப்பாடல்கள் ஒலிபரப்பப்படுவது வழமை. அந்தப்பாடல்கள் அனேகமாக பக்திப்பாடல்களாக, பாரதிபாடல்களாகவே அமையும். அதுவும் இந்தியப்பாடல்கள் தான்.ஆனால், அதில் குறிப்பாக வர்த்தக ஒலிபரப்பில் ஒரு புரட்சியை மேற்கொண்டவர் பீ.எச்.அப்துல் ஹமீத். அதுவும் பரமேஷ் கோணேஷ் பாடல்களை வைத்தே நிகழ்த்தப்பட்டது. அந்தத் தனிப்பாடல்கள்ஒலிபரப்பப்படும் இடத்தில் எம்.பி.பரமேஷ் பாடிய பாடல்களை ஒலிபரப்பினார். இதன் மூலம் பரமேஷ் கோணேஷ் புகழ் இலங்கை முழுவதும் பரவியது மாத்திரமல்ல, தமிழகத்திலும் பரமேஷ் கோணேஷ் இசைக்கலைஞர்கள் பேசப்பட்டனர்.

சிங்கள மொழிப்பாடல்கள் இசைத்தட்டுக்களாக வெளிவந்து மக்கள் ஆதரவைப்பெற்ற காலத்தில் வர்த்தக ரீதியிலான ஒரு வெற்றியைப் படைக்க வேண்டும் என்ற வேணவா கொண்டு பரமேஷ் கோணேஷ் சகோதரர்கள் மேற்கொண்ட முயற்சி முழுமையாக வெற்றி பெற்றது என்றே கூறலாம். பரமேஷ் கோணேஷ் இசை ஒலிப்பதிவுகளின் பொழுதும் தொடர்ந்து மேடை நிகழ்ச்சிகளின் பொழுதும் இலங்கையின் ஒப்பற்ற இசைக்கலைஞர் பப்பா மிஷ்கின் வழங்கிய ஒத்துழைப்பு ,வழிகாட்டல் என்பவற்றை பரமேஷ் கோணேஷ் சகோதரார்கள் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூர்வர்.

உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது.. என்ற பாடலும் புகழ்பெற்று மக்கள் நெஞ்சம் நிறைந்தது. அப்பொழுது தான் பரமேஷின் காதலி மாலினியும் தமிழ் நாட்டில் தன் காதலன் தனது குரலில் தூதுவிட்ட பாடலையும் கேட்டு மகிழ்ந்தார். அவர்களின் காதல் வெற்றிக்கு இப்பாடல் முழுமையாகத் துணை புரிந்தது. திரையிசைப் பாடல்களையும் தாண்டி ஒரு மெல்லிசைப பாடல் மக்கள் மனதை வருடியது. அந்தப பாடலை வழங்கிய கலைஞர் களைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது. இன்றும் அந்தப்பாடல் இளைய தலைமுறையினரையும் கவர்ந்து நிற்கிறது. இசையரங்கங்களிலும், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது.. பாடல் 53ஆண்டுகள் தாண்டியும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றால் அந்தப்பெருமையும் புகழும் எம்.பி.பரமேஷிற்குரியது. பரமேஷ் கோணேஷ் இசைக்கலைஞர்கள் இசைக்குழுவையும் இயக்கி வந்தார்கள். இசைத்தென்றல் எனும் மேடை இசைநிகழ்ச்சியை வழங்கிவந்தார்கள்.அதில் தமிழ்த்திரைப் படப்பாடல்களுக்கு நிகராகச்சமமாக ஈழத்துப் பாடல்களையும் அரங்கங்களில் அளிக்கைசெய்ததில் மிகப்பெரும் பங்கு வகித்தவர்கள் பரமேஷ் கோணேஷ் சகோதரர்கள்.பரமேஷின் ஈழத்து மெல்லிசை, துள்ளிசைப்பாடல்கள் அன்று தென்னிந்தியத் திரைப்படப் பாடல்களுடன் போட்டிபோட்டு ஜனரஞ்சக அந்தஸ்துப் பெற்றன .பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் நிகழ்ச்சிக்கான பதினைந்துநிமிட ஒரு வர்த்தகவிளம்பர நிகழ்ச்சியை பீ.எச்.அப்துல் ஹமீத் தயாரித்து வழங்கியதைப் பதிவு செய்திருக்கிறார்.

பெரிய வர்த்தக நிறுவனங்களின் அளவுக்கு இலங்கை வானொலியில் ஒரு வர்த்தக விளம்பர நிகழ்ச்சியை பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றலுக்காக நடத்தியதென்றால் அதுவும் கூட ஒருபெரும் சாதனை என்றே கொள்ளலாம்.யாழ்ப்பாணத்தில் 1971ம் ஆண்டு திறந்தவெளி அரங்கில் பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் பார்த்து ரசித்த நினைவுகள் என்னுள் பசுமையாகவே உள்ளன.நேரம் அறிவித்து நிகழ்ச்சி ஆரம்பித்து நடத்தினர். மாலை 5.30 என்றால், சரியாக 5.30க்கு நேரத்தை அறிவித்து பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் தொடங்கப்பட்டது .வானொலிப்பாணியிலேயே அறிவிப்பாளர் கே.ரி.செல்வகுமார் இசைக்கலைஞர்களுடன் மேடையில் மேசை முன் அமர்ந்திருந்து நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

1972ம் ஆண்டு தினகரன் விழாவை முன்னிட்டு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் நிகழ்ச்சியில் பரமேஷ் கோணேஷ் சகோதரர்களுக்கும் மகேசுக்கும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் மெல்லிசைமன்னர்கள் என்ற பட்டம் அளிக்கப்பட்டது.எம்.பி.பரமேஷ் அவர்களை யாழ்ப்பாணத்தில் எனதுஒலிபரப்புப்பணிக்காலத்தில் அடிக்கடி சந்திக்கக்கூடியதாய் அமைந்தது. அவ்வேளைகளில் அவரது பாடல்களை எமதுஒலிபரப்பில் ஒலிபரப்பி எமது கலைஞர் களுக்கான ஆதரவை வழங்க முடிந்தது.எம்.பி.பரமேஷ் புலம் பெயர்ந்து ஜேர்மனியில் 1984முதல் வாழ்ந்து வருகிறார். இங்கும் பல இசைநிகழ்ச்சிகளை வழங்கிமக்கள் ஆதரவைப் பெற்றுள்ளார். பிரான்ஸ்நாட்டில்அவரதுநண்பர், இசையமைப்பாளர் எஸ்.கே.பஞ்சரட்ணம் அவர்களுடன் இசைப்பதிவுகளை மேற்கொண்ட வேளையிலும் பரமேஷ் அவர்களை பிரான்ஸ் தமிழமுதம் வானொலிக்காக செவ்விகண்டேன்.தற்பொழுது அவருடன் அடிக்கடி தொலைபேசி வழியான உரையாடல் நிகழ்ந்து வருகிறது. 2021டிசம்பர்16அன்று75வதுபிறந்தநாளை மிகஅமைதியாக ஜேர்மனியில் கொண்டாடுகிறார்.உலகெங்கும் இருக்கும் கலைஞர்கள் அவரை வாழ்த்தி மகிழ்வித்தார்கள். நாமும் எம்.பி.பரமேஷை இனிதே வாழ்த்துகிறோம்.